**Starting time 01.21 P.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 335/2013**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff solemnly affirmed by Tmt. Sathya, Gr. III Bench Clerk of this court, on 17.03.2022 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சின்னசாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

1 முதல் 3 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : எனக்கு விவசாய நிலம் எதுவும் உள்ளதா என்றால், 1-1/2 ஏக்கர் நிலம் காட்டுக்கோட்டையில் உள்ளது. எனக்கு சொந்தமான நிலத்தின் சர்வே எண் என்னவென்றால், தெரியவில்லை. ராமு நாயுடு மற்றும் சன்னாசி என்பவர்களை தெரியுமா என்றால், தெரியும். ராமு நாயுடு நிலத்தில் பண்ணையம் செய்ததற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ராமு நாயுடுவின் சகோதரர்கள் மொத்தம் எத்தனை பேர் என்றால் சன்னாசி நாயுடு, சின்னைய நாயுடு மற்றும் கண்ணன் என்று மூன்று சகோதரர்கள். ராமு நாயுடு குடும்பத்தில் எழுதிய பாகப்பிரிவினை பத்திரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியாது, ஆனால் கேள்விப்பட்டுள்ளேன். எந்த ஆண்டு பாகப்பிரிவினைப் பத்திரம் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால், தெரியாது. எந்தெந்த சர்வே எண்ணில் யார் யாருக்கு எவ்வளவு சொத்து பாகமாக ஒதுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால், சர்வே எண் 83 மற்றும் அதன் உட்பிரிவுகள் ஆகும், ஒவ்வொருவருக்கும் 1-1/2 ஏக்கர் பாகமாக ஒதுக்கப்பட்டது. எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து ராமு நாயுடுவுக்கு சொந்தமான சொத்தை யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சன்னாசி நாயுடு

குத்தகைக்கு அனுபவித்து வருகிறார். எவ்வளவு தொகைக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்றால், அதை பற்றி தெரியாது. குத்தகை பத்திரம் எதுவும் எழுதப்பட்டுள்ளதா என்றால், இல்லை. ராமு நாயுடுவுக்கு சொந்தமான சொத்தை, சன்னாசி நாயுடு சுமார் 40 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார் என்றால், 40 ஆண்டுகளுக்கும் மேல் அனுபவித்து வருகிறார். நான் வசிக்கும் இடத்திற்கும், தாவா சொத்து இருக்கும் இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1-1/2 கி.மீ. இருக்கும். பஞ்சாயத்து எப்போது எதற்காக நடந்தது என்றால், பாகப் பிரிவினைக்காக நடந்தது. ராமு நாயுடுவின் சகோதரர்களுக்கு பாகமாக வந்த சொத்தை கண்ணன் மற்றும் சின்னைய நாயுடு விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். அச்சொத்துக்களை யார் வாங்கியது என்றால், தெரியாது. உள்ளூரில் யாரும் சாட்சி சொல்ல வராததாலும், வாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் கற்பனையானது என்றால், சரியல்ல.

1 முதல் 3 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

4 முதல் 9 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறுவிசாரணையில்லை.

Ending Time: 01.34 P.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**